**OS No.219/2023**

**DW–3 –சுப்பிரமணி**

**த/பெ.**

**நாள். 23.02.2026**

**பிரதிவாதி தரப்பில் சாட்சி–3 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1.சண்முகத்தை எனக்கு 50 ஆண்டுகளாக தெரியும். தாவா சொத்தின் கதவு எண் மற்றும் இதர விவரங்களை நான் பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய பிரமாணம் வாக்கு மூலத்தில் குறிப்பிட்ட இருப்பது போல் ஏப்ரல் மாதத்தில் தெரியவந்தது. அதன் பின்பு ஜூன் மாதத்தில் தான் பஞ்சாயத்து நடந்தது. பாட்டனார் உயில் எழுதி வைத்திருப்பதாக தெரியவந்தது

2.பாட்டனார் பெயர் தெரியாது. சண்முகத்தின் தாத்தா பெயர் நஞ்சப்ப நாடார். நஞ்சப்ப நாடார் இன் இறப்புக்கு நான் போயிருக்கிறேன். உயிலைப் பற்றி எனக்கு தெரியும் அதில் இருக்கும் சொத்துக்களை பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாணம் வாக்கு மூலத்தில் இருக்கும் அடித்தல் திருத்தலில் நான் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 2007 ஜூன் மாதத்தில் பஞ்சாயத்து நடந்ததாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்ட இருப்பது பொய் என்றால் சரி அல்ல.

3.பெரியவர்கள் முன்னிலையில் என்று குறிப்பிட்ட சொல்லி இருந்தபோதிலும் அந்த பெரியவர்கள் யார் யார் என்று பிரமாணவாகு மூலத்தில் சொல்லவில்லை.

குறிப்பிட்ட நாளில் ராஜசேகர் இருந்தார் என்றும் பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லவில்லை. நான் சொல்வது போல் பஞ்சாயத்து ஏதும் நடக்கவில்லை என்றும் சண்முகத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சண்முகம் தற்போது கோயம்புத்தூரில் அப்படி இருந்து வருகிறார் இங்கேயும் இருந்தார்.நான் பிரமாண வாக்கு மூலத்தில் பிரதிவாதி

தந்தைக்கு தாவா சொத்தை பாத்தியப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.

**OS No.219/2023**

**DW–2 –எம்.ராஜசேகர்**

**த/பெ.மாரிமுத்து**

**நாள். 23.02.2026**

**பிரதிவாதி தரப்பில் சாட்சி–2 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1.எனக்கு சொந்த ஊர் அய்யம்பாளையம். சின்னசாமி யார் மீது போட்டு இருக்கிறார் என்றோ வழக்கு சொத்து விவரங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான் எனக்கு தெரியாது. வாதி, பிரதிவாதியின் தந்தை பெயர் என்னவென்று கேட்டால் முத்துசாமி. பிரமாண வாக்குமூலத்தில் இருக்கும் அடித்தல் திருத்தலில் நான் சிற்றொப்பமிடவில்லை என்று சொன்னால் ஆமாம், கீழே கையெழுத்து செய்து இருக்கிறேன்.

2. என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் 2007 என்ற வருடம் அடித்தல் திருத்தல் இருக்கும் இடத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் குறிப்பிட்டிருக்கும் ஜூன் 15 என்பது வழக்கு விசாரணைக்கு வந்த பின்பு தான் முடிவு செய்யப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல.

3.முதல் பிரதிவாதி பஞ்சாயத்து நடந்தபோது தான செட்டில்மென்ட்டை காட்டினார் என்று சொன்னால் ஆமாம் காட்டினார். முத்துசாமிக்கு பாத்தியப்பட்ட ஆவணங்களை பார்த்தேனா என்று கேட்டால் அதனை பற்றி சொன்னார்கள். அதில் என்னென்ன சொத்துக்கள் எழுதி இருக்கிறது என்று நான் படித்துப் பார்க்கவில்லை காலை நம்பர்களை சொன்னார்கள். காட்டு பூமிக்கு உயில் எழுதி வைத்திருப்பதாக சொன்னார்களா என்று கேட்டல் ஆமாம்.

4.வாதி பிரதிவாதிகளுக்கு இடையே இருக்கும் பிரச்சனைகள் தகராறுகள் எதுவும் எனக்கு தெரியாது என்றும் பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க வந்து அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லி இருப்பது போல்

ஏற்கனவே சொத்தை பாகம் பிரித்து விட்டு அதில் பிரதிவாதி ஒரு பாகத்தில் குடியிருந்து வருவதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. சண்முகம் கோயம்புத்தூரில் தன்னுடைய சொந்த வீட்டில் குடியிருக்கிறார் என்று சொன்னால் ஆமாம் அவர் அங்கு தான் வேலை செய்து வருகிறார்.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.